
# ந. சுப்புரெட்டியாரின் படைப்புகள் : கலையும் கருத்தியலும்



பதிப்பாசிரியர்கள்
முனைவர் க. முருகேசன்
முனைவர் சு. இராமலிங்கம்

# ந. சுப்புரெட்டியாரின் படைப்புகள் : கலையும் கருத்தியலும்

(பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்கம்)


| | | |
|---|---|---|
| பதிப்பாசிரியர்கள் | : | **முனைவர் க. முருகேசன்**<br>**முனைவர் சு. இராமலிங்கம்** |
| பதிப்புரிமை | : | பதிப்பாசிரியர்கள் |
| முதற்பதிப்பு | : | ஜூலை, 2016 |
| வெளியீடு | : | **தமிழ்த்துறை**<br>**கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி**<br>கோயம்புத்தூர் - 641029. |
| கணினி அச்சாக்கம் | : | **பிரடாக் பிரிண்ட்,**<br>476 பூமாதேவி கோவில் அருகில்<br>கவுண்டர் மில்ஸ் (அஞ்சல்)<br>கோயம்புத்தூர் - 29.<br>அலைபேசி : 98432 73994, 91505 91017 |
| பக்கங்கள் | : | XVI + 416 = 432 |
| விலை | : | உரூ. 350/- |

**ISBN : 978 - 81 - 932327 - 8 - 1**


# International Conference on Art and Ideology of Dr. N. Subbu Reddiar


| | | |
|---|---|---|
| Editor's | : | **Dr. K. Murugesan.**<br>**Dr. S. Ramalingam** |
| Copyright's | : | Editors |
| First Edition | : | July, 2016 |
| Published | : | **Department of Tamil**<br>**Kongunadu Arts and Science College**<br>Coimbatore - 641 029. |
| Computer Printing at | : | **Prdag Print**<br>476/1, Near Boomadevi Kovil<br>G.N. Mills (Po), Coimbatore - 29.<br>Cell : 98432 73994, 91505 91017 |
| Pages | : | XVI + 416 = 432 |
| Prize | : | **Rs. 350/-** |

76. முனைவர் ஜோ. சரவணன் 385
ந.சுப்புரெட்டியாரின் பார்வையில் முறைமை

77. திருமதி சே. அமலி லூசியா 391
ந.சுப்புரெட்டியார் காட்டும் புறங்கொடாப் போர்வீரன்

78. முனைவர் பொருநை. க. மாரியப்பன் 397
ந.சுப்புரெட்டியாரின் அறிவியல் தமிழ் - பொதுப்பார்வை

79. முனைவர் சு. ஞானப்பூங்கோதை 403
ந.சுப்புரெட்டியாரின் பாண்டி நாட்டுத் திருப்பதிகள் : ஒரு மீள்பார்வை

80. முனைவர் க. முருகேசன் 409
ந.சுப்புரெட்டியார் காட்டும் திருநாம மகிமையும் திருவடிச் சிறப்பும்

# 80. ந.சுப்புரெட்டியார் காட்டும் திருநாம மகிமையும் திருவடிச் சிறப்பும்



**முனைவர் க. முருகேசன்**
*தமிழ்த்துறைத் தலைவர்*
*கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி*
*கோயம்புத்தூர்-641 029.*

கோடானுகோடி எண்ணிக்கையில் பிறப்பெடுத்துள்ள உயிர்களுக்கும் அவ்வுயிர்களின் தலைவனாகிய இறைவனுக்கும் இடையிலான உறவானது அநாதிகாலந்தொட்டுத் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. அறிதல், தெளிதல், உணர்தல் ஆகிய மூன்றில் உணர்தலாகிய உணர்வானது தன்னிடம் தொடர்புடையாரிடத்தில்தான் தோன்றுவது இயல்பு. ஒருவரிடத்து உணர்ச்சி தோன்ற வேண்டுமாயின் அவரிடத்துப் பலகாலும் பழகி, அப்பழக்கத்தினால் ஈடுபாடு தோன்றியிருந்தால் மட்டும் சாத்தியம். இத்தகு இலக்கணத்தை நன்கறிந்த இறையடியார்கள் இறைவனை உணர்ந்து கொண்ட தன்மையை 'கண்ணால் யானும் கண்டேன் காண்க' (திருமுறை., 83,58) என்றும் 'கரந்ததோர் உருவே, களித்தனன் உன்னைக் கண்ணுறக் கண்டு கொண்டு இன்றே' (திருமுறை., 8:22,6) என்றும் மணிவாசகர் பாடுவதைக் கொண்டு, குறிகுணம் ஒன்றும் இல்லாத, கற்பனை கடந்து நிற்கும் அவனைக் கருத்தால் காணக் கண்கள் கருவிகளாகின்றன. 'கார்முகில் போல் வண்ணன் என் கண்ணனை நான் கண்டேனே' (நாலாயிர, 2280) என்று ஆழ்வார் உணர்ந்து கொண்ட காட்சி பிம்பம் கற்போரின் உள்ளத்தில் பதியும் வகையில் கம்பராமாயணத்தில் பாசுரங்களில் காணத்தகும் எம்பெருமானின் திருவடிப்பெருமையை ந.சுப்புரெட்டியார் எடுத்துரைத்துள்ள பாங்கினை உணர்த்திக்காட்ட இக்கட்டுரை முற்படுகின்றது.

## திருவருளும் திருவடிப்பெருமையும்

வண்டுகள் நெருங்கிப்பாடும் வயல்கள் சூழ்ந்த திருமண்டங்குடி எனும் பதியில் அவதரித்த தொண்டரடிப் பொடியாழ்வார் அருளிச்செய்த திருமாலைப் பாசுரங்களில் எட்டெழுத்து மந்திரத்தின் மேன்மை சுட்டப்பட்டுள்ளது. இந்திரலோகத்தை ஆட்சி செய்யக்கூடிய இன்பம் கிடைத்தாலும் அதனை விரும்பமாட்டேன் எனவும், பச்சை நிறமுடைய மலை போன்ற திருமேனியும், பவளம் போன்ற செந்நிற அதரங்களும், செந்தாமரை போன்ற கண்களும் கொண்ட எம்பெருமானின் திருநாமத்தினை உச்சரிக்கும் பேற்றையே எப்போதும் விரும்புவேன் என்றும் பாடும் தன்மையை விளக்குவதற்காக ந.சுப்புரெட்டியார்